முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (19.07.2025) திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு75, நம்மாழ்வார் பேட்டை 2ஆவது தெரு பகுதியில் தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் மற்றும் மாநகராட்சி மூலதன நிதி ஆகியவற்றின் கீழ் ரூபாய் 2.28 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் கட்டடத்திற்கான பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர். பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மண்டல அலுவலர் (பொ) ஆர்.சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆடி மாதத்தை முன்னிட்டு, பெரியபாளையம் – பவானி அம்மன் திருக்கோயிலில்

கூழ் வார்த்தல் - மங்கலப் பொருட்கள் வழங்கும் திட்டம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர், ஜூலை 21- முதலமைச்சர். மு.க. ஸ்டாலின் அவர்களின் சீர் மிகு வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று *(20.07.2025)* திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், பவானி அம்மன் திருக்கோயிலில் *2025 - 26* ஆம் நிதி ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்புகளை நிறைவேற்றிடும் வகையில் ஆடி மாதத்தில் *10* அம்மன் திருக்கோயில்களில் கூழ் வழங்குதல் மற்றும் *5* அம்மன் திருக்கோயிலில் மங்கலப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பெரியபாளையம் பவானி அம்மன் திருக்கோயிலில் பெருந் திட்ட வரைவின்கீழ் நடைபெற்று வரும் கியூ லைன் காம்ப்ளக்ஸ், பக்தர்கள் தங்குமிடம் அன்னதானக் கூடம் சுகாதார வளாகம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து மேற்கொள்ள அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

திருக்கோயில்களின் திருவிழா காலங்களில் தரிசனத்திற்கு வருகின்ற பக்தர்களுக்கு துறையின் சார்பில் பக்தர்கள் மனம் குளிர புதிய, புதிய திட்டங்களை செயல்படுத்திட ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதோடு தேவையான அரசு நிதியையும் உடனுக்குடன் வழங்கி வருகின்ற முதலமைச்சர் அவர்களுக்கு இத்தருணத்தில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். *2025 - 26* ஆம் நிதி ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்புகளை நிறைவேற்றிடும் வகையில் ஆடி மாதத்தில் *10* அம்மன் திருக்கோயில்களில் கூழ் வழங்குதல் மற்றும் *5* அம்மன் திருக்கோயிலில் ஒரு லட்சம் பெண் பக்தர்களுக்கு மங்கலப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சியினை பெரியபாளையத்தில் தொடங்கி வைத்துள்ளோம். இதன்படி, கூழ் வழங்கும் திட்டம் சமயபுரம், திருவேற்காடு, ஆனைமலை, பண்ணாரி, புன்னைநல்லூர், பெரியபாளையம், உறையூர், மேல்மலையனூர், புட்லூர் மற்றும் வீரபாண்டி திருக்கோயில்களிலும், மங்கலப் பொருட்கள் வழங்கும் திட்டம் சமயபுரம், மதுரை, இருக்கண்குடி, பெரியபாளையம், சென்னை காளிகாம்பாள் ஆகியதிருக்கோயில்களிலும் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

பெரியபாளையம், அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலை பொறுத்த அளவில் *15* ஆண்டுகளுக்கு முன்பு இத்திருக்கோயிலின் வளர்ச்சிக்கு மறைந்த சேதுரத்தினம்மாள் அவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு பெருந்தொகையை இத்திருக்கோயிலுக்காக சேர்த்து வைத்திருந்தார். கடந்த ஆட்சியின் பத்தாண்டு காலத்தில் திருப்பணிகளுக்கு அனுமதி கேட்டு கிடைக்காத சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் ரூ. *76* கோடியில் பக்தர்கள் தங்குமிடம், ரூ. *22.50* கோடியில் வரிசை மண்டபம், ரூ. *25.50* கோடியில் அன்னதான கூடம் மற்றும் திருமண மண்டபம், ரூ. *7* கோடியில் சுகாதார வளாகம், ரூ. *21* கோடியில் பக்தர்கள் தங்கும் விடுதி, ரூ. *6.34* கோடியில் மூன்றாம் பிரகாரம் மதில்சுவர் மற்றும் மண்டபம், ரூ. *10.43* கோடியில் ஏழு நிலை ராஜகோபுரம் ஒன்று, ஐந்து நிலை ராஜ கோபுரம் மூன்றும், ரூ. *1.60* கோடியில் உபசன்னதிகள் திருப்பணிகள் என ரூ. *173.58* கோடி மதிப்பீட்டில் *10* பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும், இத்திருக்கோயிலின் வளர்ச்சிக்காகவும், பக்தர்களின் போக்குவரத்து மற்றும் வாகன நிறுத்தம் வசதிக்காகவும் சுமார் *6.76* ஏக்கர் இடம் நிலம் கையகப்படுத்திட அரசாணை வழங்கப்பட்டு அதற்கான பணி நடைபெற்று வருகிறது. இதற்காக *19* கோடி ரூபாயை திருக்கோயிலிலிருந்து வழங்க இருக்கின்றோம். அந்தப் பணியும் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக முழுமையாக நிறைவு பெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இதுமட்டுமல்லாமல் *19* திருக்கோயில்களில் ரூ.*1,770* கோடி மதிப்பீட்டில் பெருந் திட்ட வரைவின்கீழ் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அண்மையில் திருச்செந்தூர் மற்றும் திருப்பரங்குன்றம் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி தமிழ் கடவுள் முருகனுக்கு பெருமை சேர்த்த ஆட்சி இந்த ஆட்சியாகும். இத்திருக்கோயில்களில் வரலாறு காணாத பல லட்சம் மக்கள் கூடிய போதும் எவ்வித சிறு அசம்பாவிதம் கூட ஏற்படாமல் அனைத்து பக்தர்களுக்கும் எந்தவிதமான குறைபாடுகளும் இல்லாமல் உணவு, குடிநீர், கழிப்பிட வசதி , மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி என்று அனைத்து வகையிலும் சிறப்பாக செய்து திறமையை வெளிப்படுத்திய ஆட்சி திராவிட மாடல் ஆட்சியாகும்.

இந்த ஆண்டு சட்டமன்ற அறிவிப்புகளின்படி, திருவிழா காலங்களில் சிறப்பு கட்டணம் ரத்து, திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் பச்சிளம் குழந்தைகளுக்கு காய்ச்சிய பால் வழங்குதல், அன்னதானத் திட்டத்தில் வடை மற்றும் பாயசம், ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களில் கூழ் வழங்குதல் மற்றும் மங்கலப் பொருட்கள் வழங்குதல் என பல்வேறு புதிய திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பின், இதுவரை *3,386* திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. அதில் *1,019* அம்மன் திருக்கோயில்கள், *131* முருகன் திருக்கோயில்கள் குடமுழுக்கு கண்டிருக்கின்றது. அதனால் தான் சக்திகள் இன்றைக்கு மகிழ்ச்சியோடு உலா வந்து கொண்டிருக்கின்றார்கள்.

திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ. *7,727* கோடி மதிப்பிலான *7,863.08* ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. மாநில வல்லுநர் குழுவினால் *12,842* திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக, *11,842* திருக்கோயில்களில் ரூ.*7,025* கோடி மதிப்பீட்டில் *26,994* திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் உபயதாரர்கள் ரூ.*1,416.43* கோடியிலான *11,176* திருப்பணிகளை செய்து தருகின்றனர். இது இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் ஒரு ஆன்மிகப் புரட்சி என்றே சொல்லலாம். இந்த பணிகளில் ரூ.*3,582* கோடி மதிப்பீட்டில் *13,807* பணிகள் நிறைவுற்றிருக்கிறது.

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு அதிகளவில் பக்தர்கள் வருகை தருவதால் பெருந்திட்ட வரைவின் கீழ், ரூ. *9* கோடியில் பக்தர்களுக்கான வசதிகள் செய்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் அடிக்கல் நாட்டினார்கள். மேலும் மாற்று மலைப்பாதை அமைத்திட அரசு ரூ. *57* கோடி நிதி வழங்கியுள்ளது.

அதேபோல் சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்பிரமணி சுவாமி திருக்கோயிலுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் பக்தர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, ரூ. *67* கோடியை அரசு நிதியாக வழங்கி சாலை அகலப்படுத்தும் பணிக்கு நில எடுப்பு மற்றும் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில் பெரியபாளையத்திலும் சாலையை அகலப்படுத்துகின்ற பணியினை மேற்கொள்ள விரைவில் முதலமைச்சர் அவர்களின் மேலான அனுமதியை பெற்று நிறைவேற்றுவோம்.

அரசியல் களத்திலே நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக பொய்யையே தன்னுடைய வாழ்வின் நடைமுறையாக கொண்டு வீணாக வெட்டி வேலை செய்பவர்களுக்கு இந்த புனித தலத்திலிருந்து அவர் பெயரை உச்சரித்து இந்த பாவத்தை செய்ய நான் தயாராக இல்லை. இது முழுக்க முழுக்க ஆன்மிகம் சம்பந்தப்பட்ட தெய்வீக மனம் கமழ்கின்ற, மக்கள் நலனுக்காக பாடுபடுகின்ற அரசின் நிகழ்வில் அரசியல் கேள்விகளை தவிர்ப்பது மனதிற்கு இதமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே.கோவிந்தராஜன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், வேலூர் மண்டல இணை ஆணையர் திருமதி தி.அனிதா, துணை ஆணையர் சி.கருணாநிதி, உதவி ஆணையர் மு.சிவஞானம், பரம்பரை அறங்காவலர் அஞ்சன் லோகமித்ரா, முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. உமாமகேஸ்வரி, திருக்கோயில் செயல் அலுவலர் து.ரு.பிரகாஷ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் சட்டமன்ற தொகுதி தலைமையிடப் பார்வையாளர் பரிதிஇளம்சுருதி எம்.சி. தலைமையில், தாம்பரம் சட்டமன்ற தொகுதி, தாம்பரம் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட 65, 66, 67, 68,69,70, ஆகிய வட்டங்களில் ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை பணிகளை விரைந்து முடிப்பது குறித்து, பாக முகவர்கள்(BLA2)பாக டிஜிட்டல் முகவர்களுடன்(BDA) கலந்துரையாடினார். இந்நிகழ்வில் 5வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், தாம்பரம் கிழக்கு பகுதி செயலாளர் ஆ.நடராஜன், தாம்பரம் மாநகர துணை செயலாளர் பி.சதாசிவம், வட்ட செயலாளர்கள் எஸ்.சாந்தகுமார், எம். மோகன்,சதாசிவம், எம்.பெருமாள், ஈ.சாம்சங், ஆ.நடராஜ், BLA, BDA, கலந்து கொண்டனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 171 அ வட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்தநாள் மற்றும் திராவிட மாடல் அரசின் ஐந்தாம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு நேற்று 20.7.2025 மாவட்ட பிரதிநிதி தென்றல் வி. விஜய் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு அயன்பாக்ஸ், மூன்று சக்கர வாகனம், புடவை உள்ளிட்ட நல உதவிகளை மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் பகுதி செயலாளர் எஸ்.முரளி, வட்டச் செயலாளர் பா.பொன்னுசாமி, கீதா முரளி எம்.சி., மா.பா. அன்பு, கோ.கண்ணன், தவனேசன், எல்.உதயகுமார், பி.எல்தாஸ், ரமேஷ், மோகன்ராஜ், அருண்குமார், சாஸ்தா எஸ்.குமார், ஸ்டார் வி. குமார், ஆர்.எஸ்.மனோகர், பஞ்சர் முருகன், மின்னல் செல்வம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் - மாநில அளவிலான முதலமைச்சரின் விளையாட்டு விருதுகள்!

மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவிப்பு!

அரியலூர், ஜூலை 21–

ஆண்டு தோறும் பன்னாட்டு அளவிலும், தேசிய அளவிலும் பதக்கங்கள் பெற்ற சிறந்து விளங்கும் 2 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் விளையாட்டு வீரர்கள் 2 சிறந்த பயிற்றுநர்கள், 2 சிறந்த உடற்கல்வி இயக்குநர் / உடற்கல்வி ஆசிரியர்களுக்கு முதலமைச்சர் மாநில விளையாட்டு விருது பரிசாக தலா ரூ.1.00 இலட்சம் வீதம், ரூ.10000/– மதிப்பிலான தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுப் பத்திரம் ஆகியவற்றை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை வழங்கி ஒவ்வொரு ஆண்டிலும் வழங்கி வருகிறது.

இதுகுறித்த செய்தினை அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி, தெரிவிக்கையில், விருது ஆண்டுக்கு முந்தைய மூன்று ஆண்டுகள் விளையாட்டில் சாதனைகள் படைத்த விவரங்க னைச் சமர்ப்பித்தல் வேண்டும். இது தவிர விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் ஒரு நடத்துநர். ஒரு நிர்வாகி / ஒரு ஆதரவளிக்கும் நிறுவனம் மற்றும் ஒரு நன்கொடையாளர் (ரூ.10.00 இலட்சத்திற்கும் அதிகமாக நன்கொடை அளித்தவர்) ஒரு ஆட்ட நடுவர் / நடுவர் / நீதிபதி ஆகியோர்களுக்கு முதலமைச்சர் மாநில விளையாட்டு விருது ஒவ்வொரு நிதியாண்டிலும் (ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 முடிய) வழங்கப்படுகிறது. இவர்களுக்கு மேற்கண்ட விருதிற்கு ரூ. 10,000/– க்கு மிகாமல் ஒரு தங்கப்பதக்கமும், ஒரு பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்படி 2024–2025 மற்றும் 2025–2026 ஆகிய 2 ஆண்டுகளுக்கான முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. தமிழ்நாட்டில் 3 ஆண்டுகளாக வசித்து வரும் தமிழ்நாட்டிற்காக இரண்டு முறை தமிழ்நாடு அணியின் சார்பாக கலந்து கொண்டு இந்தியாவின் சார்பாக விளையாடியவர்கள் தகுதி பெறுவர்.

2. இந்தியாவின் சார்பாக கலந்து கொண்ட தமிழ்நாட்டில் பணியின் நிமித்தம் குறைந்தது 5 ஆண்டுகளாக வசித்து வரும் முப்படை. ரயில்வே, காவல் அஞ்சல் மற்றும் தொலைதொடர்புத் துறை மறறும் இதர துறைகளில் பணிபுரிபவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெறுவர்.

3. இரண்டாவது முறையாக ஒரு நபருக்கு இவ்விருது வழங்கப்பட மாட்டாது.

4. ஒருவர் காலமாகும் பட்சத்திலும், இவ்விருது வழங்கப்படும்.

5. இவ்விருதிற்கு முந்தைய 3 ஆண்டுகளில் விளையாட்டில் பெற்ற சிறந்த வெற்றிகளை இவ்விருதிற்காக கருத்தில் கொள்ளப்படும்.

6. முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதிற்கான 2024–2025ஆம் ஆண்டிற்கு சிறந்த விளையாட்டு வீரர்கள், சிறந்த பயிற்றுநர்கள், சிறந்த உடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியர் ஆகியோர்களுக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் சாதனை ஆண்டு 1.4.2021 முதல் 31.3.2024 வரை ஆகும். ஆட்ட நடுவர்/நடுவர்/நீதிபதி, நன்கொடையாளர், நிர்வாகி ஆகியோர்களுக்கு 1.4.2022 முதல் 31.3.2024 வரை ஆகும்.

7. முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதிற்கான 2025–2026ஆம் ஆண்டிற்கு சிறந்த விளையாட்டு வீரர்கள், சிறந்த பயிற்றுநர்கள், சிறந்த உடற்கல்வி இயக்குநர்/உடற்கல்வி ஆசிரியர் ஆகியோர்களுக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் சாதனை ஆண்டு 1.4.2022 முதல் 31.3.2025 வரை ஆகும். ஆட்ட நடுவர்/நடுவர்/நீதிபதி, நன்கொடையாளர், நிர்வாகி ஆகியோர்களுக்கு 1.4.2023 முதல் 31.3.2025 வரை ஆகும்.

8. விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் தங்களது சான்றிதழ்களின் நகல்களை சான்றொப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

9. உரிய விண்ணப்பத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

10. விளையாட்டுப் போட்டிகளின் பட்டியல்கள்

அ. ஒலிம்பிக் போட்டிகள்

ஆ. சர்வதேச ஒலிம்பிக் குழு அங்கீகாரத்துடன் சர்வதேச விளையாட்டு இணைத்தால் நடத்தப்படும் காமன்வெல்த் வாகையர் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை மற்றும் ஆண்டு தோறும்)

இ. ஆசிய விளையாட்டு போட்டிகள்

ஈ. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள்

உ. சர்வதேச ஒலிம்பிக் குழு அங்கீகாரத்துடன் சர்வதேச விளையாட்டு இணையத்தால் நடத்தப்படும் உலக வாகையர் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒரு முறை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை மற்றும் ஆண்டு தோறும்)

ஊ. தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

எ. தேசிய விளையாட்டுப் போட்டிகள்

ஏ. மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு இணையம் நடத்தும் தேசிய வாகையர் போட்டிகள்

ஐ. விளையாட்டு நன்கொடையாளர் ஒரு ஆண்டிற்கு ரூ.10.00 இலட்சத்திற்கு மேற்பட்ட நன்கொடை அளிப்பவர் மட்டும்

10. அழைப்புப் போட்டிகள் மற்றும் மண்டலங்களுக்கு இடையேயான போட்டிகள் கருத்தில் கொள்ளப்படாது.

11. 2022–2023 மற்றும் 2023–2024 ஆகிய முந்தைய மூன்று ஆண்டுகளான 01.04.2020 முதல் 31.03.2023 முடிய பெற்ற வெற்றிகள் கருத்தில் கொள்ளப்படும்

விளையாட்டில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்/ வீராங்கனைகளுக்கு மற்றும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் ஒரு நடத்துநர் / ஒரு நிர்வாகி/ ஒரு ஆதரவளிக்கும் நிறுவனம் மற்றும் ஒரு நன்கொடையாளர் (ரூ.10.00 இலட்சத்திற்கும் அதிகமாக நன்கொடை அளித்தவர்) / ஒரு ஆட்ட நடுவர் / நடுவர் / நீதிபதி ஆகியோர்களுக்கான முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுக்கான விண்ணப்பப் படிவம் மற்றும் விரிவான விதிமுறைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் http://www.sdat.tn.gov.in என்ற இணையதளம் மூலம் பதிவிறக்கலாம்.

விண்ணப்பங்கள் அடங்கிய உறையின் மேல் முதலமைச்சர் மாநில விளையாட்டு விருதுக்கான விண்ணப்பம் என்று எழுதப்பட்டிருக்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உறுப்பினர் செயலர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டிய கடைசி நாள். 11.08.2025 மாலை 5.45 வரை ஆகும்.

மேற்காணும் இச்செய்தியினை அரியலூர் மாவட்டத்திலுள்ள தகுதி வாய்ந்த நபர்கள் அனைவரும் அறிந்து விண்ணப்பித்து பயன் பெற வேண்டுமாறு அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி தெரிவித்துள்ளார்.